wetzikon
Schule



# பெற்றோர்- தகவல் சுற்றுப்பயணத்திற்கான அழைப்பிதழ் "மழலையர் பள்ளியில் நுழைவதற்கு ஒரு வருடம் முன்பு"

## 1 ஜூன் 2024 சனிக்கிழமை

காலை **8.30** மணி முதல்
(முடிவு நண்பகல் **12.00** மணி)




## பெல்டு தொடக்கப்பள்ளி, புதிய கட்டிடவளாகம்

Kreuzackerstrasse 15, 8620 Wetzikon

அன்புள்ள பெற்றோர்கள் மற்றும் பாதுகாவலர்களே

உங்கள் பிள்ளை 2025 ஆம் ஆண்டு கோடைகாலத்தில் மழலையர் பள்ளியைத் தொடங்குவார் - இது முழு குடும்பத்திற்குமான ஒரு முக்கியமான நிகழ்வு.

நீங்கள் ஏற்கனவே உங்களை நீங்களே கேட்டுக்கொண்டிருக்கலாம்:

- இதற்கு, என் குழந்தையை நான் எப்படி தயார்படுத்துவது?
- சூரிச் மாநிலத்தில் பள்ளி அமைப்பு எவ்வாறு செயற்படுகிறது?
- மழலையர் காலைப்பள்ளி எவ்வாறு வடிவமைக்கப்பட்டுள்ளது?
- வெற்சிகோன் நகரில் எனது குழந்தைகளுடன் நான் பயன்படுத்தக்கூடிய சலுகைகள் ஏதாவது உள்ளதா?

உங்கள் மகளை அல்லது மகனை மழலையர் பள்ளி நுழைவுக்குத் தயாராக்கும், இத் தகவல் நிகழ்வுக்கு உங்களை நாம் அழைக்கிறோம். ஒரு சுற்றுப்பயணத்தில் நீங்கள் பல்வேறு தலைப்புகளின் உள்ளடக்கங்களையும், உங்கள் கேள்விகளுக்கான பதில்களையும் பெறுவீர்கள். மழலையர் பள்ளி ஆசிரியர்கள் நாளாந்த கற்பித்தல் முறைகளை விளக்குவார்கள், மேலும் நீங்கள் பிள்ளைகளைத் தயார் படுத்துவதற்கு பல்வேறு சலுகைகளை எவ்வாறு பயன்படுத்தலாம் என்று துறைசார் வல்லுனர்கள் எடுத்துரைப்பர். அத்தோடு பள்ளி வள ஆளணியினரையும் நீங்கள் தொடர்பு கொள்ளலாம்.

விரைவில் உங்களைத் தெரிந்துகொள்ள ஆவலுடன் காத்திருக்கிறோம்.

Stadt Wetzikon
Schule

Thomas Ruppanner
Leitung Bildung

Claudia Bosshardt
Geschäftsbereichsleitung
Bildung

# எட்டு விடயப் பரப்புகளுடன் பயணம்

1. என் குழந்தையால் ஏற்கனவே என்ன செய்ய முடியும்?
2. வீட்டில் அன்றாட வாழ்வில் ஊக்கம்
3. பிராந்திய நூலகத்தின் சலுகைகள்
4. ஆரம்பகால தலையீடு - குடும்ப மையம் FiZ
5. சூரிச் மாநிலத்தின் பள்ளி அமைப்பு
6. மழலையர் பள்ளியில் அன்றாட வாழ்க்கை
7. நாளாந்த பராமரிப்புக் கட்டமைப்புச் சலுகைகள்
8. விளையாட்டுக் குழுக்கள் மற்றும் தினப்பராமரிப்பு மையங்கள்

சுற்றுப்பயணம் சுமார் 1½ மணிநேரம் நீடிக்கும் மற்றும் ஒவ்வொரு 10 நிமிடங்களுக்கு ஒரு சுற்றுப்பயணம் தொடங்கும். கடைசி சுற்றுப்பயணம் காலை 10.45 மணிக்கு தொடங்குகிறது.

சுற்றுப்பயணம் குழந்தைகளுக்கு ஏற்றது அல்ல. சிறு குழந்தைகளுக்கு குழந்தை பராமரிப்பு வழங்குகிறோம் (பதிவு தேவை).

மொழிபெயர்ப்பு மற்றும் குழந்தை பராமரிப்பு?

QR குறியீட்டைப் பயன்படுத்தி மே 12, 2024 வரை மொழிபெயர்ப்பு அல்லது குழந்தைப் பராமரிப்புக்கு முன்பதிவு செய்யலாம்.

# வழிகாட்டுத்தடம்

பெல்டு தொடக்கப்பள்ளி, புதிய கட்டிடவளாகம்
Kreuzackerstrasse 15, 8620 Wetzikon




வாகனத்தரிப்பிடம் (மட்டுப்படுத்தப்பட்ட):
→ அம்புக்குறியில் (P), Bahnhofstrasse, Kreuzackerstrasse வழியாக உள்நுழையவும்.

**Stadt Wetzikon | Schule**
Guldisloostrasse 1
8620 Wetzikon

schulverwaltung@wetzikon.ch
www.schule-wetzikon.ch

**Kontakt Claudia Schadl**
Assistentin Leiter Bildung

Direktwahl 044 931 23 20
claudia.schadl@wetzikon.ch